# ஒரு வாக்களிக்கும் இடத்துக்குப் போக இயலாதா?

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

**vote.nz**



## 2026 பொதுத் தேர்தலில் வாக்களித்தல்

நீர் 2026 பொதுத் தேர்தலில் வாக்களிக்க **ஒற்றோபர் 25 ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுக்குள்** பதிவு செய்திருக்க வேண்டும்.

நீர் 2026 பொதுத் தேர்தலில் ஒற்றோபர் 26 திங்கட்கிழமை தொடங்கித் தேர்தல் நாளான நவம்பர் 7 சனிக் கிழமை மாலை 7 மணி வரை வாக்களிக்கலாம். நீர் போக முன்னர் வாக்களிக்கும் இடங்கள் திறந்திருக்கும் நேரங்களையும் இடங்களையும் பற்றி அறிய **vote.nz** ஐப் பார்க்க.

உமக்கு ஒரு வாக்களிக்கும் இடத்துக்குப் போக இயலாவிடின் நீர் **ஒற்றோபர் 25 ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுக்குள்** பதிவு செய்திருந்தால் நீர் அப்பொழுதும் வாக்களிக்கலாம்.

**Complete this form on both sides to authorise someone to collect voting papers on your behalf**

**Voter's details. Please print clearly.**

My first name(s) are:

My last name is:

My contact phone number is:

Address where I am enrolled to vote:

✓ Tick the electoral roll you believe you are enrolled on:

☐ General roll ☐ Māori roll

OFFICIAL USE ONLY:
Index reference

**எங்கு, எப்போது வாக்களிப்பது என்பதைப் பற்றிய தகவல்களை vote.nz இல் அல்லது 0800 36 76 56 ஐ அழைத்துப் பெறலாம்.**

நீர் ஒற்றோபர் 26 திங்கட்கிழமை தொடக்கம் தேர்தல் நாளான நவம்பர் 7 சனிக் கிழமை மாலை 7 மணி வரை வாக்களிக்கும் இடங்களில் வாக்களிக்கலாம்.

முற்கூட்டியே வாக்களிக்கும் இடங்கள் திறந்திருக்கும் நாட்களும் நேரங்களும் மாறுபடும். நீர் போக முன்னர் vote.nz இல் வாக்களிப்பு நேரங்களைச் சரி பாரும்.

வாக்களிக்கும் இடங்கள் தேர்தல் நாளான நவம்பர் 7 சனிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்.

## தேர்தல் நாளில் வேலை செய்கிறீரா?

உமக்குத் தேர்தல் நாளில் வாக்களிக்கும் இடத்துக்குச் சென்று வாக்களிக்க வேலையிலிருந்து நேரமெடுக்கச் சட்டப்படி அனுமதியுண்டு. நீர் எவ்வாக்களிக்கும் இடத்திலும் ஒற்றோபர் 26 திங்கட்கிழமை தொடக்கம் முற்கூட்டியே வாக்களிக்கவும் செய்யலாம்.

## நீர் ஒரு பராமரிப்பு இல்லத்தில் இருந்தாலும் கூட நீர் வாக்களிக்கலாம்

நீர் ஒரு பராமரிப்பு இல்லத்தில் இருந்தால் நீர் எம்மைத் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை. உமது உள்ளூர்த் தேர்தல் தொகுதி முகாமையாளர் வாக்களிப்புப் பணிகளை ஏற்பாடு செய்ய உமது பராமரிப்பு இல்லத்தைத் தொடர்பு கொள்வார்.

## நீர் மருத்துவமனையில் இருந்தாலும் கூட நீர் வாக்களிக்கலாம்

நீர் மருத்துவமனையில் இருப்பதால் உமக்கு வாக்களிக்கும் இடத்துக்குப் போக இயலா விட்டால் ஒற்றோபர் 26 திங்கட்கிழமை தொடக்கம் உமது நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் உமது வாக்களிப்பு ஆவணங்களை உமக்குக் கொண்டு வந்து தரலாம்.

நீர் தேர்தல் நாளுக்கு முன்னர் மருத்துவமனைக்குப் போகத் திட்டமிடப்பட்டிருந்தால் உமக்கு இயலுமாயின் ஒற்றோபர் 26 திங்கட்கிழமை தொடக்கம் நீர் முற்கூட்டியே வாக்களிப்பது சாலச் சிறந்தது. மேலும் தகவல்களுக்காக 0800 36 76 56 இல் எம்மை அழைக்க.

## உமக்கு ஒரு வாக்களிக்கும் இடத்துக்குப் போக இயலாவிட்டால் உமக்குள்ள தெரிவுகள்

நாம் வாக்களிக்கும் இடத்துக்குப் போக முடியாதவர்களுக்கு வாக்களிப்புப் பணிகளை வழங்குகிறோம். ஒரு நலக்குறைவின் அல்லது ஓர் ஊனத்தின் காரணமாக என்பது போன்று உமக்கு நேரிற் சென்று வாக்களிக்க இயலாவிடின் நீர் யாரிடமாவது உமது வாக்களிப்பு ஆவணங்களைக் கொண்டு வரக் கூறலாம் அல்லது வாக்களிப்பு ஆவணங்களை உமக்கு அனுப்பச் சொல்லி விண்ணப்பிக்கலாம்.

## உமது வாக்களிப்பு ஆவணங்களைப் பெறக் கூறுக

உமக்கு வாக்களிக்கும் இடத்துக்குப் போக இயலா விட்டால் இதில் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தை நிரப்பி ஒப்பமிட்டு யாரிடமாவது உமக்காக அதை ஒரு வாக்களிக்கும் இடத்துக்குக் கொண்டு செல்லக் கூறுக. அவர் உமக்கு நிறைவு செய்யவென உமது வாக்களிப்பு ஆவணங்களைத் திரும்பக் கொண்டு வருவார்.

உமக்கு உம் சார்பாக உமது வாக்களிப்பு ஆவணங்களைப் பெற எவருமில்லாவிடின் நாம் உமக்கு அவற்றை அனுப்பலாம்.

மேலும் தகவல்களைப் பெற உமது உள்ளூர்த் தேர்தல் தொகுதி முகாமையாளரைத் தொடர்பு கொள்க. நீர் அவர்களது தொடர்புத் தகவல்களை vote.nz இற் காணலாம் அல்லது 0800 36 76 56 இல் எம்மை அழைக்கலாம்.

## உமது வாக்களிப்பு ஆவணங்களைத் திருப்பி அனுப்பும் முறை

நீர் எவரிடமாவது உமது நிறைவு செய்யப்பட்ட வாக்களிப்பு ஆவணங்களை நவம்பர் 7 சனிக் கிழமை மாலை 7 மணிக்குள் வாக்களிக்கும் இடத்தில் ஒப்படைக்கக் கூறலாம்.

உம்மிடம் ஒரு திருப்பியனுப்பும் தூதஞ்சற் பொதி இருந்தால் ஒரு தூதஞ்சற் பெறலை ஏற்பாடு செய்யப் பொதியிலுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக அல்லது உமக்கு உதவி தேவைப்பட்டால் 0800 36 76 56 இல் எம்மை அழைக்க.

i

**மேலும் தகவல்களைப் பெற:**

- **vote.nz** இற்குச் செல்க
- **0800 36 76 56** ஐ அழைக்க

## Give my voting papers to the person I have authorised

The name of the person I have authorised to collect and deliver my voting papers to me is:

| |
|---|
| |

**Note:** this application must be signed for it to be valid.

☐ I have been authorised to collect and deliver voting papers to the voter named on this form.

| Signature of authorised person | Date |
|---|---|
| | |

| Signature of voter | Date |
|---|---|
| | |